24.02.2026 O.S. 114/2016 வா.சா2 வேல்முருகன்

சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு 1ம்பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை

இந்த வழக்கு எதற்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது என்பது தெரியுமா என்றால் வழிப்பாதைக்காக தாக்கல் செய்யப்பட்டுள்ளது. வாதிகள் வீட்டிற்கும், என் வீட்டிற்கும் தூரம் அதிகம் என்றால் சரியல்ல. அருகருகே உள்ளது. வாதிகள் எனக்கு உறவினர்கள் என்றால் உறவினர்கள் இல்லை. தெரிந்தவர்கள். வாதிகள் மற்றும் பிரதிவாதிக்கு இடையே எவ்வளவு நாட்களாக பிரச்சனை நடக்கிறது என்பது தெரியுமா என்றால் தெரியாது. இந்த வழக்கு எத்தனை வருடங்களாக நடந்து வருகிறது என்பது தெரியுமா என்றால் தெரியாது. வாதிகள் எனக்கு தெரிந்த நபர்கள் என்பதால் அவர்களுக்காக சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரியல்ல. வாதிகளுக்கு சுவற்றை ஒட்டி 3 அடிபாதை உள்ளது என்றும் அதனை மட்டுமே பயன்படுத்தி வருகிறார்கள் என்றால் சரியல்ல. வழக்குசொத்தை பற்றியோ, பாதை பற்றியோஎனக்கு எதுவும் தெரியாது என்றும், வாதி கேட்டுகொண்டதால் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எனது சாட்சியம் ஏற்கதக்கது அல்ல என்றால் சரியல்ல.

(1ம் பிரதிவாதியின் குறுக்குவிசாரணையை 2ம் பிரதிவாதி தரப்பில் ஏற்றுக்கொள்வதாக தெரிவிக்கப்பட்டது)

(ஒம்)எஸ்.முருகவேல்,
கூடுதல் சார்பு நீதிபதி,
தென்காசி.